# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண் 135/2014

பெயர் : தங்கவேல் நாள் : 23.01.2023

வா.சா.1 – 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 2.55

5 ம் பிரதிவாதி என்மீதும், மற்ற நபர்கள் மீதும் தாக்கல் செய்திருந்த இந்த நீதிமன்ற அசல் வழக்கு எண் 14/2014 க்கான வழக்குரையின் சான்றிட்ட நகல்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 14/2014 ன் வழக்குரையின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் ஆகிய நாங்கள் அந்த வழக்கில் 14, 15, 16 ம் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு உள்ளோம் என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 14/2014 ல் நானும், 4 ம் பிரதிவாதியான பி.கே.பழனிசாமி என்பவரும் தாக்கல் செய்திருந்த எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல்தான் என்னிடம் காட்டபடும் ஆவணம் என்றால், சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த எதிர் வழக்குரையானது 04.08.2014 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். இந்த நீதிமன்ற அசல் வழக்கு எண் 135/2014 என்ற வழக்கை 14.06.2014 ம் தேதியிலேயே தாக்கல் செய்தேன் என்றால், சரிதான்.

2) அசல் வழக்கு எண் 135/2014 ன் வழக்குரை ஆவணங்களான 22 முதல் 26 வரையிலான ஆவணங்களை அசல் வழக்கு எண் 14/2014 வழக்கிலிருந்து சான்றிட்ட ஆவணங்களாக பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். 22 முதல் 26 வரையிலான ஆவணங்கள் 03.02.2014 ம் தேதியில் நகல் வேண்டி விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டு 27.04.2014 ம் தேதியில் சான்றிட்ட நகல் பெறப்பட்டுள்ளளது என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 135/2014 வழக்கை 16.06.2014 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், 22 முதல் 26 வரையிலான ஆவணங்களின் நகல்களை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே எந்த காரணத்திற்காக நகல் பெற்றேன் என்றால், அந்த ஆவணங்கள் என்னவென்று தெரிந்து கொள்வதற்காக நகல் பெற்றேன்.

3) வழக்குரையில் ஆவண எண் 28, 29 ல் குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் பெயரிலான முதல் தகவல் அறிக்கை மற்றும் நாங்கள் பெற்ற முன் பிணை உத்தரவின் சான்றிட்ட நகலை இந்த

நீதிமன்றத்தின் முதல் விசாரணையின்போது தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதேபோல் வழக்குரை ஆவண எண் 30 ஆக குறிப்பிட்டுள்ள புகாரின் சான்றிட்ட நகலை முதல் விசாரணையில் குறியீடு செய்யவில்லை என்றால், சரிதான். மேற்கண்ட ஆவணங்களை இந்த வழக்கில் குறியீடு செய்தால் அது எங்களுக்கு எதிராக அமைந்துவிடும் என்பதால்தான், மேற்படி ஆவணங்களை நாங்கள் குறியீடு செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்குரையின் சங்கதிகளின்படி பட்டா எண் 125 ல் உள்ள நிலங்கள் அனைத்தும் வாதிகளுக்கு சொந்தமானதா என்றால், பட்டா எண் 125 ல் சில சர்வே எண்களில் உள்ள நிலங்களை எங்களது தாத்தாவே விற்பனை செய்துவிட்டார்.

4) மேற்படி பட்டா எண் 125 க்கு சம்பந்தப்பட்ட எந்தெந்த சர்வே எண்களில் உள்ள நிலங்களை எங்களது தாத்தா விற்பனை செய்தார் என்று ஞாபகமில்லை. பட்டா எண் 125 ல் உள்ள அனைத்து புல எண்களுக்கும் வாதிகள்தான் உரிமையாளர்கள் என்ற அடிப்படையில்தான் வா.சா.ஆ.51 ஆவணத்தை குறியீடு செய்துள்ளோம் என்றால், சரிதான். வா.சா.ஆ.44 முதல் 48 வரையிலான ஆவணங்களில் பட்டா எண் 125 க்கு சம்பந்தப்பட்ட புல எண்களில் சிலவற்றை எனது தாத்தா விற்பனை செய்துவிட்டார் என்றோ அது எந்தெந்த சர்வே எண்கள் என்று குறிப்பிட்டுள்ள சொல்லவில்லையென்றால், சரிதான். பட்டா எண் 125 ல் உள்ள சர்வே எண் 95/5 ஐ மட்டும் வேறு நபருக்கு மாற்றி கொடுத்துவிட்டார்கள். அதற்காகத்தான் நாங்கள் மனு செய்தோம். பட்டா எண் 125 ல் எங்கள் தாத்தா விற்பனை செய்த நிலங்களை மேற்படி பட்டாவிலிருந்து நீக்கம் செய்ய எந்த மனுவும் செய்யவில்லை.

5) நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை பத்தி 10 ல் 2 முதல் 4 பிரதிவாதிகள் மட்டுமே இடைஞ்சல் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், 5 ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்ததாக குறிப்பிடவில்லை என்றாலும், சரிதான். அதேபோல் 1 ம் பிரதி இடைஞ்சல் செய்யதாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான் நான் இந்த அசல் வழக்கை 2 முதல் 4 பிரதிவாதிகள் 17.05.2014 ம் தேதி இடைஞ்சல் செய்ததற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். 1 ம் பிரதிவாதியை எதனடிப்படையில் அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம் என்பதை, வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், 1 ம் பிரதியிடமிருந்து 2 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதால், 1 ம் பிரதிவாதியை வழக்கில் சேர்த்து உள்ளேன். நான் தாக்கல் செய்து வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் 1 ம் பிரதிவாதியை 2 ம் பிரதிவாதியின் கிரையதாரர் என்ற அடிப்படையில்தான் வழக்கு தரப்பினராக சேர்த்துள்ளோம் என்பதை கூறிப்பிட்டு கூறவில்லையென்றால், சரிதான். அதேபோல் 5 ம் பிரதிவாதியை எந்த காரணத்திற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றும்,

வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால், சரிதான். வழக்குரையில் 1, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கெழு மூலம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டு கூறவில்லையென்று சொன்னால், சரியல்ல. 1, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கெழு மூலமே இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. இந்த வழக்கின் வழக்குரையில் அசல் வழக்கு எண் 14/2014 வழக்குபற்றி விபரங்களை குறிப்பிட்டு கூறாததற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால், எனக்கு தெரியவில்லை.

6) அசல் வழக்கு எண் 14/2014 வழக்கைபற்றி எனது வழக்குரையில் குறிப்பிட்டு அதன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்திருந்தால், எங்களுடைய வழக்குரை பொய்யானது என்ற விபரமும், எங்கள் பெயரிலான ஆவணங்கள் மோசடியானவை என தெரிய வந்து இந்த வழக்கு கோப்பிற்கு எடுக்கப்படாத என்பதை உணர்ந்துதான் அசல் வழக்கு எண் 14/2014 வழக்கு சங்கதிகளை பற்றி வழக்குரையில் மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல. பட்டா எண் 125ல் உள்ள புல எண்களில் உள்ள எந்தெந்த நிலங்களை எனது தாத்தா விற்பனை செய்துள்ளார் என்பதற்கான ஆவணங்களையும், நாங்கள் எந்தெந்த சர்வே எண்களில் அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்பதற்கான ஆவணங்களையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

5ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 3.45</u>

ஒப்பம் /தங்கவேல்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.